# TNNLU LIBRARY

## News Clipping Service

# New fields open up in law as society becomes urbanised, says SC judge

**Justice M.M. Sundresh advises young lawyers against allowing technology like artificial intelligence to take over litigation; he sees a bright future for women lawyers, especially those dealing with marital disputes and commercial litigation**

**The Hindu Bureau**
TIRUCHI




M.M. Sundresh, Judge, Supreme Court, presenting degree certificate and medals to a student at the convocation of Tamil Nadu National Law University in Tiruchi on Saturday. M. MOORTHY

The evolution of the Indian social structure in recent years has opened up many new fields of specialisation for young lawyers, Justice M.M. Sundresh, Judge, Supreme Court of India, said in Tiruchi on Saturday.

He addressing the seventh convocation ceremony of Tamil Nadu National Law University (TNNLU) on Saturday.

Justice Sundresh said: "Words are the most powerful weapons that you have to use carefully. The craft of advocacy lies there. If you master facts, you develop the ability to twist them. As the village-based society changes in India, emerging fields such as commercial litigation, intellectual property, personal law and technology-based fields like cyber-crime will open up." While advising graduands to adopt technology to ease the paperwork, the judge cautioned them against allowing artificial intelligence to take over litigation completely. Women lawyers stood a chance to excel in the legal profession, especially in dealing with marital disputes.

The degrees were conferred by Justice Sushrut Arvind Dharmadhikari, Chief Justice of Madras High Court and Chancellor of TNNLU. Justice R. Suresh Kumar, judge, Madras High Court, was present.

A total of 138 students were awarded their degrees at the ceremony.

**Funding for research**

Vice-Chancellor V. Nagaraj, who presented the annual report, said the university had received funding of ₹3 crore from Azim Premji Foundation to carry out research and training for young advocates to encourage them to take up *pro bono* cases of clients from economically weaker sections. "This is a three-year programme, at the end of which, the students will have to submit a report. If the report is accepted, the young lawyers can start taking pro bono cases. Every year, 10 candidates will be selected, will be given ₹20,000 as stipend. The staff employed by them will also be paid salaries," said Mr. Nagraj.

The V-C said the TNNLU had approached the Neyveli Lignite Corporation for corporate social responsibility funding to start a research, education, and consultancy centre for MSMEs.

Source : The Hindu,
Date 26/04/2026,
Page No. 2
Trichy Edition

# TNNLU LIBRARY

## News Clipping Service

# Young lawyers must embrace AI, says SC judge

**VIVANESH PARTHIBAN** @ Tiruchy

EVEN as Artificial Intelligence (AI) begins to diminish a few roles of lawyers, young professionals must embrace the technology with caution, Supreme Court judge MM Sundresh said on Saturday.

Delivering a convocation address at the seventh graduation day of Tamil Nadu National Law University (TNNLU), Justice Sundresh said AI is already being deployed in countries such as the US for legal opinion and ro resolve civil dispute. "It gives precise information and opinion equivalent to many minds," he said.

Justice Sundresh noted that the nature of disputes is evolving alongside societal changes. Matrimonial litigations such as divorce, child custody and restitution cases are expected



Justices MM Sundresh and Sushrut Arvind Dharmadhikari conferring degree on a graduand on Saturday | EXPRESS

to rise, creating significant opportunities for women lawyers, who are already excelling in this domain, he said.

As regards criminal cases, Justice Sundresh said conventional criminal cases and family property disputes may gradually decline due to urbanisation, shrinking joint family structures and changing social dynamics. In contrast, emerging areas such as financial disputes, intellectual property, cyber crime and white-collar offences are expected to dominate the future legal landscape.

Addressing students, Justice Sundresh described lawyers as "social engineers" and "social doctors," stressing their role in resolving conflicts in society. He underlined that advocacy lies not merely in knowledge of law but in mastering facts and presenting them effectively. "It is the impact you make on the judge that matters," he said.

Justice Sundresh also urged graduates to remain lifelong learners and adapt to technological disruptions, emphasising that those who effectively integrate AI into their practice will be better positioned in the evolving legal profession.

A total of 138 students received degrees at the convocation, including 53 men and 85 women. Of these, 48 were from BA LLB (Hons), 43 from BCom LLB (Hons) and 47 from the LLM programme.

Among toppers, Rajeta Shuklaa secured the first rank in BA LLB (Hons), followed by Mimi Dharshana and Mohammed Rayyan.

In the BCom LLB. (Hons) programme, Aishwarya Mathanan bagged the top rank, while Mohamed Adnan Sami S and Gnazhal Rani J secured second and third places. Brindha S was awarded the gold medal in the LLM programme.

The convocation was presided over by Chief Justice of Madras High Court Sushrut Arvind Dharmadhikari, Chancellor of TNNLU.

Madras High Court Judge R Suresh Kumar was present.

**Source : Sunday Express,**
**Date: 26/04/2026,**
**Page No. 04,**
**Trichy Edition**


# TNNLU LIBRARY

## News Clipping Service


# Law's new frontiers favour women, says SC judge Sundresh

Times News Network

R Baskar




**IN FLYING COLOURS:** Supreme Court judge M M Sundresh attended TNNLU's 7th convocation ceremony

**Trichy:** Supreme Court judge M M Sundresh on Saturday said the evolving landscape of law is increasingly suited for women, noting that they now form a significant proportion of law students.

Addressing the 7th convocation of Tamil Nadu National Law University (TNNLU), he said traditional civil litigation such as partition and declaration suits could decline, while areas like intellectual property rights (IPR), finance and personal law—particularly matrimonial disputes—are set to grow, offering strong prospects for women.

"The present trend shows more women enrolling in law. As society evolves and new fields emerge, the profession is becoming more suited for women," he said.

Sundresh also urged graduates to adapt to technological changes, even as he expressed caution about the growing role of artificial intelligence. "I am sceptical about this area, but it cannot be avoided. AI is already entering the legal field and beginning to influence the role of lawyers. This is happening in many countries, including the US. The role of lawyers is gradually shrinking, with legal opinions increasingly sourced from AI. The difficult part is that AI-generated opinions may at times be more accurate than those of even the best legal minds. That said, we must learn to embrace technology," he added.

At the convocation, 138 students—53 men and 85 women—received degrees. This included 48 from BA LLB (Hons), 43 from BCom LLB (Hons) and 47 from LLM. Degrees were conferred by Justice Sushrut Arvind Dharmaadhikari, Chief Justice of the Madras high court and chancellor of TNNLU, and Justice R Suresh Kumar of the Madras high court.


Source: Sunday Times,
Date: 26/04/2026,
Page No. 4,
Trichy edition

# TNNLU LIBRARY

## News Clipping Service

தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா

# ஏ.ஐ. கற்றுக் கொள்வது வழக்குகளை திறம்பட கையாள உதவும்

**உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் கருத்து**

**திருச்சி**

திருச்சியில் உள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் 7-வது பட்டமளிப்பு விழா, நேற்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் வேந்தரான, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி தலைமை வகித்து, மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

பி.ஏ. எல்எல்பி(ஹானர்ஸ்) முடித்த 48 பேர், பி.காம் எல்எல்பி (ஹானர்ஸ்) முடித்த 43, பேர், முதுநிலை சட்டம் (எல்எல்எம்) முடிந்த 47 பேர் என மொத்தம் 138 மாணவ, மாணவிகள் பட்டம் பெற்றனர்.

விழாவில், பி.ஏ. எல்எல்பி (ஹானர்ஸ்) படிப்பில் முதலிடம் பிடித்த ராஜிதா சுக்லா தங்கப் பதக்கம் பெற்றதுடன், 2025-ம் ஆண்டின் இளநிலை சட்டப் படிப்பில் பெண்களில் முதலிடம் பிடித்ததற்கான விருதை பெற்றதுடன், 'உரிமையியல் நடைமுறைச் சட்டம்' பாடத்தில் முதலிடம் பிடித்ததற்கான பேராசிரியர் கே.கோவிந்தராஜன் விருதை தீப்திதா என்ற மாணவியுடன் பகிர்ந்து கொண்டார். இதேபோல, பி.காம். எல்எல்பி (ஹானர்ஸ்), முதுநிலை சட்டப்படிப்பில் சிறப்பிடம் பெற்றவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.



தமிழ்நாடுதேசியசட்டப்பல்கலைக்கழகபட்டமளிப்புவிழாவில் மாணவிக்கு பட்டம் வழங்கிய உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி. உடன், உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ். படம்: ர.செல்வமுத்துகுமார்

விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் பேசியது:

மற்ற துறைகளை விட, சட்டத் துறை வித்தியாசமானது; அர்ப்பணிப்புடன் கூடியது. மற்ற துறைகளில் இருப்பவர்கள், அவரவர் துறைசார்ந்த பிரச்சினைகளை மட்டுமே கையாள்கின்றனர். ஆனால், வழக்கறிஞர்கள் சமூகத்தின் பொறியாளர்களாக, மருத்துவர்களாக, தணிக்கையாளர்களாக பிரச்சினைகளை அணுகி, புரிந்துகொண்டு, தீர்வு காண்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

வழக்கறிஞர் தொழிலில், தங்களது தரப்பு வாதத்தை முன்வைக்கும்போது நீதிபதிகளுக்கு புரியும்படியான வார்த்தைகளை கவனமாகப் பயன்படுத்த வேண்டும். இதற்கு, சட்டங்களையும், பிற அறிவார்ந்த விஷயங்களையும் தொடர்ந்து கற்க வேண்டும்.

கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார சூழல் உயர்வால் ஏற்பட்டுள்ள சமூக மாற்றத்தால், குற்றவியல், உரிமையியல் போன்ற வழக்கமான வழக்குகள் குறைந்து வருகின்றன.

வணிக வழக்குகள், நிதிசார் வழக்குகள், அறிவுசார் சொத்துரிமை, இணையக் குற்ற வழக்குகள் அதிகரித்து வருகின்றன. இதேபோல, தனிநபர் சட்டம், மணமுறிவு, குழந்தைகள் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இவற்றில் வழக்கறிஞர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு(ஏ.ஐ) தொழில்நுட்பம் நன்மை செய்யும் அளவுக்கு, தீமைகளும் உள்ளன. ஏ.ஐ. கற்றுக்கொள்வது உங்களது வழக்குகளை திறம்பட கையாள உதவும். சட்டம் தொடர்பான கருத்துகளை தரவும், வழக்குகளுக்குத் தேவையான ஆவணங்களை தயார் செய்யவும் மட்டுமே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் முடியும். வழக்காடவோ, வழக்குகளை புரிந்துகொண்டு தீர்ப்பளிக்கவோ முடியாது. மூத்த வழக்கறிஞர்களை அணுகி சட்ட நுணுக்கங்களை கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

துணைவேந்தர் வி.நாகராஜ் வரவேற்றார். உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.சுரேஷ் குமார், பதிவாளர் எஸ்.எம்.பாலகிருஷ்ணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**Source : Hindu Tamil,**
**Date: 26/04/2026,**
**Page No. 5,**
**Trichy Edition**

# வாதங்களின்போது வார்த்தைகளில் கவனம் தேவை

## வக்கீல்களுக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதி அறிவுறுத்தல்




திருச்சியில் உள்ள தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தின் 7வது பட்டமளிப்பு விழாவில், சுப்ரீம்கோர்ட் நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ், தங்கப்பதக்கம் பெற்ற மாணவி ஐஸ்வர்யா மதனுக்கு பதக்கத்தை வழங்கினார். அருகில், பல்கலைக்கழக வேந்தரான, சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி. (அடுத்த படம்) பட்டம் பெற்ற மாற்றுத்திறனாளி மாணவி தனப்பிரியா.

திருச்சி, ஏப். 26–

திருச்சியில் உள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் 7வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக கூட்ட அரங்கில் நேற்று நடந்தது.

விழாவுக்கு பல்கலைக்கழக வேந்தரான, சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி தலைமை வகித்து, மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

பல்கலைக்கழக துணை வேந்தர் நாகராஜ் ஆண்டறிக்கை வாசித்தார். சுப்ரீம்கோர்ட் நீதிபதி எம்எம் சுந்தரேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்களை வழங்கி பேசியதாவது:

சட்டத்துறை மற்ற அனைத்து துறைகளையும் விட வித்தியாசமானது. அர்ப்பணிப்புடன் கூடிய தொழில் வக்கீல் தொழில். இன்ஜினியர், டாக்டர், ஆடிட்டர் உள்ளிட்டோர் அவரவர் துறைசார்ந்த பிரச்னைகளை மட்டுமே கையாள்கின்றனர்.

ஆனால், வக்கீல்கள் மட்டுமே சமூகத்தின் இன்ஜினியர், டாக்டர் மற்றும் ஆடிட்டர்களின் பிரச்னைகளை அணுகி, புரிந்து, தீர்வு காண்பதில் முக்கிய பங்காற்றுகின்றனர்.

வக்கீல்கள், நீதிபதிகளுக்கு புரியும் வகையிலும், அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வார்த்தைகளை கவனமாக பயன்படுத்த வேண்டும். வக்கீல் தொழிலில் இது ஒரு கலையாகும்.

இதற்கு, சட்டத்தையும்; உண்மைகளையும், பிற அறிவார்ந்த விஷயங்களையும் கற்றுத்தேறுவதோடு, வித்தியாசமாக சிந்திக்க வேண்டும். தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

தங்களுக்கு விருப்பமான துறையை தேர்ந்தெடுத்து, இன்று பட்டம் பெற்றுள்ள மாணவ, மாணவிகள் தற்போதைய சூழலில் வளர்ந்து வரும் போக்குகளை உற்று நோக்க வேண்டும்.

கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார சூழல் உயர்வு ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள சமூக மாற்றத்தால், வழக்கமான குற்றவியல், உரிமையியல், பாகப்பிரிவினை, உரிமை அறிவிப்பு வழக்குகள் போன்றவை குறைந்து வருகின்றன.

வணிக வழக்குகள், நிதிசார் வழக்குகள், தனிநபர் சட்டம், அறிவுசார் சொத்துரிமை, இணையக் குற்ற வழக்குகள் அதிகரித்து வருகின்றன. இதே போல, விண்வெளி, கடல்சார், அமலாக்கத்துறை, மத்தியஸ்தம், தனிநபர் சட்டம், விவாகரத்து, குழந்தைகள் பிரச்னைகள் அதிகரித்து வருகின்றன. இவற்றில் வக்கீல்கள் கவனம் செலுத்த வேண்டும். மாறி வரும் சட்டச் சூழலையும், தொழில்நுட்பத்தையும் நன்கு கற்றுக்கொள்ள வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (ஏஐ) நன்மைகளுக்கு இணையாக, அவற்றால் தீமைகளும் அதிகரித்து வருகிறது. ஏஐ கற்றுக்கொள்வது உங்களது வழக்குகளை திறம்பட கையாள உதவும். சட்டம் தொடர்பான கருத்துகளின் தரவும், வழக்குகளுக்கு தேவையான ஆவணங்களை தயார் செய்யவும் மட்டுமே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் முடியும்.

வழக்காடவோ, வழக்குகளை புரிந்து கொண்டு தீர்ப்பளிக்கவோ முடியாது. அதற்கு வக்கீல்தொழிலில் உள்ளவர்களால்தான் முடியும். இதற்கு மூத்த வக்கீல்களை அணுகி சட்ட நுணுக்கங்களை கற்றுக் கொள்ள வேண்டும்'', என்றார்.

விழாவில், பிஏ எல்எல்பி ஹானர்ஸ் பிரிவில் 48, பிகாம் எல்எல்பி ஹானர்ஸ் பிரிவில் 43 எல்எல்எம் (முதுகலை) பிரிவில் 47 என மொத்தம் 53 ஆண்கள், 85 பெண்கள் என 138 பேர் பட்டம் பெற்றனர். மேலும், கல்விசார் சாதனைகளில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

விழாவில், சென்னை ஐகோர்ட் நீதிபதி சுரேஷ் குமார், சட்டத்துறை செயலாளர் அலெக்சாண்டர் உட்பட பல்கலைக்கழக பொதுக்குழு, நிர்வாகக் குழு, கல்விக்குழு மற் றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். பல்கலைக்கழக பதிவாளர் பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

• தினமலர் • திருச்சி • 26.4.2026 11

# சட்டப்பல்கலை.யில் பதக்கம் வென்ற தங்கத்தாரகைகள்

திருச்சி, ஏப். 26–

திருச்சியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் 7வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. 138 மாணவ, மாணவிகள் பட்டம் பெற்றனர்.

இதில், பிஏஎல்எல்பி ஹானர்ஸ் படிப்பில் முதலிடம் பெற்ற மாணவி ராஜிதா சுக்லா தங்கப்பதக்கமும், 2025ம் ஆண்டின் இளங்கலை சட்டப்படிப்பில் பெண்கள் பிரிவில் முதலிடம் பிடித்ததற்கான விருது, உரிமையியல் நடைமுறைச்சட்டம் பாடத்தில் முதலிடத்திற்கான பேராசிரியர் கோவிந்தராஜன் விருது ஆகியவற்றை மாணவி தீப்தாவுடன் பகிர்ந்து கொண்டார்.

பிஏஎல்எல்பி ஹானர்ஸ் பிரிவில் மாணவி மிமி தர்ஷனா 2ம் இடத்துக்கான தங்கப்பதக்கத்தையும், முகமது ரையான் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். பிகாம் ஏஎல்எல்பி ஹானர்ஸ் பிரிவில் ஐஸ்வர்யா மதன் முதலிடத்துக்கான தங்கப்பதக்கமும், அரசியலமைப்பு சட்டம் பாடத்தில் முதலிடம் பெற்றதற்கான மூத்த வக்கீல் சி.கே.ராஜன் அறக்கட்டளை பதக்கமும் பெற்றார். இப்பிரிவில் மாணவர் முகமது அத்னான் இரண்டாம் இடமும், ஒப்பந்தச்சட்டம்1 பாடத்தில் முதலிடத்துக்காக பேராசிரியர் கோவிந்தராஜன் விருதையும், இப்பிரிவில் மாணவி ஞானழல் ராணி மூன்றாம் இடத்தையும், பன்னாட்டு சட்டத்துக்கான பேராசிரியர் மனோகர் நினைவுப்பதக்கமும் வென்றார்.

2025ம் ஆண்டுக்கான 'வங்கியியல் சட்டம்' பாடத்தில் முதலிடம் பிடித்த மாணவர்களுக்கான 'கரூர் வைஸ்யா வங்கி' பதக்கத்தை, மாணவிகள் யாழினி, நேஹா, மாணவர் தருண் மிஸ்ரா ஆகிய மூவரும் பகிர்ந்து கொண்டனர்.

முதுகலை சட்ட மேற்படிப்பு திட்டத்துக்கான தங்கப்பதக்கம் மாணவி பிருந்தாவுக்கு வழங்கப்பட்டது. இவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் விருதுகளை சுப்ரீம்கோர்ட் நீதிபதி எம்எம் சுந்தரேஷ், பல்கலைக்கழக வேந்தரான சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி ஆகியோர் வழங்கினர்.

Source: Dinamalar, Date: 26/04/2026,
Page No. 11, Trichy edition

# இளம் வழக்குரைஞர்கள் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை கற்பது அவசியம்

## உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ்




திருச்சியில் உள்ள தமிழக தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் மாணவிக்குப் பட்டம் வழங்கிய சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி. உடன் உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ், துணைவேந்தர் வி. நாகராஜ் உள்ளிட்டோர்.

**திருச்சி, ஏப். 25:** இளம் வழக்குரைஞர்கள் வளர்ந்து வரும் போக்குகளையும், தொழில்நுட்பங்களையும் கற்பது அவசியம் என உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் தெரிவித்தார்.

திருச்சி நவலூர்குட்டப்பட்டு பகுதியில் உள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற 7-ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற அவர் மேலும் பேசியதாவது:

வழக்குரைஞர்கள் தங்களது தொழிலில், தங்களது தரப்பு வாதத்தை நீதிபதிகளுக்கு புரியும்படியாக எடுத்துரைக்க வார்த்தைகளை கவனமாகப் பயன்படுத்த வேண்டும். இதற்கு, சட்டங்களையும், பிற அறிவார்ந்த விஷயங்களையும் தொடர்ந்து கற்பதுடன், வித்தியாசமாகச் சிந்திக்கவும் வேண்டும். நிகழ்காலத்தில் வளர்ந்து வரும் போக்குகளையும், தொழில்நுட்பங்களையும் கற்க வேண்டும். மூத்த வழக்குரைஞர்களை அணுகி சட்ட நுணுக்கங்களை கற்பதும் அவசியம்.

சமூக மாற்றத்தால், வழக்கமான குற்றவியல் வழக்குகள் போன்ற வழக்கமான வழக்குகள் குறைந்து வருகின்றன. வணிக வழக்குகள், நிதி சார் வழக்குகள், அறிவுசார் சொத்துரிமை, இணையக் குற்ற வழக்குகள் அதிகரித்து வருகின்றன. இவற்றில் வழக்குரைஞர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

நிகழ்வில் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும், பல்கலைக்கழக வேந்தருமான சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி, பல்கலைக்கழகத்தில் பி.ஏ. எல்எல்.பி. படிப்பை படித்த 48 பேர், பி.காம். எல்எல்.பி. படிப்பை முடித்த 43 பேர், முதுகலை சட்டப் படிப்பை முடித்த 47 பேர் (53 மாணவர்கள், 85 மாணவிகள்) என மொத்தம் 138 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். சிறப்பிடம் பெற்ற 11 பேர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

முன்னதாக, தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வி. நாகராஜ் வரவேற்று, ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர். சுரேஷ் குமார், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், அவர்களது பெற்றோர் கலந்து கொண்டனர். பல்கலைக்கழக பதிவாளர் எஸ். எம். பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.


Source : Dinamani,
Dated 26/04/2026,
Page No. 4,
Trichy edition

TNNLU LIBRARY - News Clipping Service



தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி சுந்தரேஷ், சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி சுஸ்ருத் அர்விந்த் தர்மாதிகாரி பட்டங்களை வழங்கிய காட்சி.

# வக்கீல்கள் வழக்குகளை திறம்பட கையாள ஏ.ஐ. தொழில்நுட்பம் உதவும்

## பட்டமளிப்பு விழாவில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் பேச்சு

திருச்சி, ஏப்.26-
வக்கீல்கள் வழக்குகளை திறம்பட கையாள ஏ.ஐ. தொழில்நுட்பம் உதவும் என்றுதேசிய சட்டப்பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் பேசினார்.

### பட்டமளிப்பு விழா

திருச்சி நவலூர் குட்டப்பட்டில் உள்ள தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தின் 7-வது பட்டமளிப்பு விழா நேற்று பல்கலைக்கழக கூட்ட அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு பல்கலைக்கழக வேந்தரும், சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியுமான எஸ்.ஏ.தர்மாதிகாரி தலைமை வகித்து, மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். பல்கலைக்கழக துணைவேந்தர் நாகராஜ் வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் சுப்ரீம் கோர்ட் நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

### சமூக என்ஜினீயர்

வக்கீல்கள், நீதிபதிகளுக்கு புரியும் வகையிலும், அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் வார்த்தைகளை கவனமாக பயன்படுத்த வேண்டும். வக்கீல் தொழிலில் இது ஒரு கலையாகும். இதற்கு, சட்டத்தையும், உண்மைகளையும், பிற அறிவார்ந்த விஷயங்களையும் கற்றுத்தேறுவதோடு, வித்தியாசமாக சிந்திக்க வேண்டும். தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

சட்டத்துறை, மற்ற அனைத்து துறைகளையும் விட வித்தியாசமானது. வக்கீல்கள் மட்டுமே சமூகத்தின் என்ஜினீயர், டாக்டர் மற்றும் ஆடிட்டர்களாக இருந்து பிரச்சினைகளை அணுகி, புரிந்து, தீர்வு காண்பதில் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

### ஏ.ஐ. தொழில்நுட்பம்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் (ஏ.ஐ) நன்மைகளுக்கு இணையாக, அவற்றால் தீமைகளும் அதிகரித்து வருகிறது. வக்கீல்கள்

Source: Dinathanthi, Dated: 26/04/2026, Page No: 06.